1975 நவம்பர் 7]

சொத்துகள் மீதான வரி

* 239 வினா—திரு. கி. செயராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரமன்றங்களின் சொத்து வரி விதிப்பு முறையை (Property tax)) திருத்தி அமைக்க செயற்குறிப்பு ஏதேனுமுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கி. ஜெயராமன்: தலைவரவர்களே, கட்டிடங்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் அல்லது வருட வாடகையின் அடிப்படையில் நகராட்சிச் சட்டத்தின்கீழ் இந்த வரி, "பிராபர்டி டாக்ஸ்" விதிக்கப்படுகிறது. 1920 ஆம் ஆண்டில் சட்டத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றது. கட்டிட மதிப்பிற்கோ, ஆண்டு வருமானத்திற்கோ சம்பந்தமில்லாத முறையில் வரி விதிப்பதற்கு சான்ஸ் இருக்கின்றது. இந்த வரி விதிப்பு முறை சரியானதாக இல்லாமல் இருக்கலாம். எனவே பரந்த அளவிலே, தேவையை அனுசரித்து, இன்றைய சூழ்நிலைமைகளை அனுசரித்து இந்த வரி விதிப்பு முறையை மாற்றுவதற்கு அரசு என்ன நடவடிக்கையை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இன்றைய நகராட்சி சட்டப்படி கட்டிடங்கள் வாடகையின் அடிப்படையில் வரி விதிக்கப்படுகின்றது. இதனை எந்த விதத்திலே மாற்றி அமைக்கலாம் என்பதைப் பற்றித் தெளிவான, திட்டவட்டமான முடிவுகள் எதுவும் எடுக்க முடியவில்லை.

திரு. செ. அரங்கநாயகம் : நகர்ப்புறங்களில் இன்றைக்கு இருக்கின்ற வரிச்சுமையின் காரணமாக வீடு கட்டிக் கொண்டு வீட்டுச் சொந்தக்காரர்களாக இருப்பதை விட வாடகை வீட்டிலேயே இருப்பது லாபகரமாக இருப்பதான ஒரு எண்ணம் பரவலாக இருக்கிறது. இன்றைக்கு போடப்படுகிற சொத்து வரி அந்த முறை, ஆர்ப்பிட்ரரியாகப் போடப்படுகிறது, இன்று இரண்டாண்டுகளுக்கு முன்பு சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு தீர்ப்பின் மூலம் கூறியிருக்கிறார்கள். பிராபர்டி டாக்ஸ் போடப்படுகிற

முறைக்கு ஒரு கொள்கை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. "பேர் ரெண்ட் ஆக்ட்"-ன் கைடு லைனைப் பின்பற்றி பிராபர்டி டாக்ஸ் போடுவது தான் நியாயமாக இருக்கும். இப்படிச் செய்தால் அதிகாரிகள் தங்கள் இஷ்டத்திற்கு டாக்ஸ் விதிக்கிற நிலைமை இருக்காது. எனவே, இந்த அடிப்படையில் வரி விதிக்க அரசு பரிசிலனை செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த வரி போடுவதை உள்ளாட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள். மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது போல, சுப்ரீம் கோர்ட்டிலே ரீசனபிள் ரெண்ட் என்கிற பேச்சில் போட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய முனிசிபல் சட்டத்தின் கீழ் "கிராஸ் ஆனுவல் ரெண்ட்" என்கின்ற வகையிலே—ஆண்டு மொத்த வாடகை என்கின்ற அடிப்படையிலே வரி விதிக்கின்ற முறையிலே, இன்றைக்கு அமைந்திருக்கிறது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் அடிப்படையில் வரி விதிப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 9-30)

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, நகராட்சி, பேரூராட்சி மன்றங்களில் சொத்து வரி விதிக்கின்ற அதிகாரம் நிர்வாக அதிகாரிகளுக்கே இருக்கின்றன. அவர்கள் நினைத்ததைச் செய்ய முடியும். சிலபேருக்கு குறைந்த அளவில் விதிக்க முடியும், பிரதிப் பிரயோஜனம் கருதி என்கின்ற நிலைமை எல்லாம் இருக்கின்றன. அதில் நடக்கிற தில்லுமுல்லுகளை நீக்கி நியாயமான அடிப்படையில் வரி விதிக்க ஒரு திட்டத்தை அரசு கொண்டுவருமா? அப்படிக் கொண்டுவராதுபோனால் மிகுந்த ஏற்றத்தாழ்வு தான் நிலவும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உள்ளாட்சி, நகராட்சி மன்றங்களில் இதுபோன்ற குறைபாடுகள் இருந்தால் மக்களின் பிரதிநிதிகள் தான் தீர்க்க வேண்டும். இல்லையென்றால் மக்கள் அதற்குத் தண்டனை தேர்தலில் தருவதுதான்.

1975 நவம்பர் 7]

திரு. க. உரொ. எட்மண்ட்: ஆட்சேபகரமான முறையிலோ அல்லது தவருன முறையிலோ வரி விதிக்கப்பட்டால், அப்பீல் செய்து கொள்வதற்கு ஒவ்வொரு நகராட்சி மன்றத்திலும் அப்பீல் கமிட்டி என்று இருக்கிறது. அங்காவது நியாயம் கிடைக்கின்ற அளவுக்கு அப்பீல் கமிட்டியின் சட்டதிட்டங்களைத் திருத்தி அமைத்துக்கொள்ள அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அப்பீல் கமிட்டிகள் இருக்கின்றன. அங்கே நியாயம் கிடைக்கவில்லையென்ருல் வேறு வழியில்லை. இருந்தாலும் அப்பீல் கமிட்டியிலே சில மாற்றங்களைச் செய்யலாம் என்றுதான் அரசாங்கம் யோசித்து வருகிறது.

திரு. கே. எ. வகாப்: தவருன முறையில் வரி விதிக்கப்பட்டால் நகராட்சி மன்ற உறுப்பினர்கள் தேர்தலிலே பொதுமக்களால் தண்டிக்கப்படுவார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். ஆனல் வரி விதிக்கின்ற அதிகாரத்தை நகராட்சி, உள்ளாட்சி மன்ற நிர்வாக அதிகாரிகளுக்கே கொடுத்திருக்கிருர்கள். அவர்கள் போட்ட வரியைக் கூட உறுப்பினர்கள் 10 சதவிகிதத்துக்குக் குறைவாகக் குறைக்க முடியாது என்று இருக்கிறது. இப்படியின்றி இந்த வரிவிதிக்கிற அதிகாரத்தையே நகராட்சி, உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளிடமே கொடுத்துவிட்டால் நலமாக இருக்கும் என்பதை அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அதிகாரத்தைக் கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, நகராட்சி, ஊராட்சிப் பகுதிகளில் உள்ள இலவச வாசகசாலை, பள்ளிக்கூடம் போன்ற பொதுக்கட்டிடங்களுக்கு நகராட்சி வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லையானல் அரசு அதைப் பற்றி ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விதிவிலக்கு அளிக்கப் பட்டு வருகின்றது. அப்படி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிற கட்டிடங்களின் பட்டியலை நகராட்சி மன்றம் வைத்துக் கொண் டிருக்கிறது.

[1975 நவம்பர் 7

திரு. சொ. காவேரிமணியம்: இம்மாதிரி பாதிக்கப்பட்டவர்கள் அப்பீல் கமிட்டிக்கு மனுக்கொடுக்கிற நேரத்தில் சேர்மென், அல்லது மற்ற உறுப்பினர்கள் தலையிடுவதற்கு-பவர்ஸ் ஆர் ரெஸ்ட்ரிக்டட்-அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டே இருக்கின்றன. இதை மாற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர்கள் நகராட்சி மன்றங்கள் எல்லாம் நல்லமுறையில் நடைபெற வேண்டுமென்றே விரும்புவார்கள். நகராட்சி மன்றம் செம்மையாக நடைபெறுவதற்கு வேண்டிய வருமானம் பெரும்பகுதி சொத்து வரியைப் பொறுத்தே இருக்கிறது. சொத்துவரியைக் குறைப்போமானால் நகராட்சிகளின் நிர்வாகம் பாதிக்கப்படும். ஆகவே, அவர் தெரிவித்த யோசனை ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.

திரு. த. சோனையா: நகராட்சி, ஊராட்சி மன்றங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வரிவிதிப்பில் மாற்றம் செய்து வருகிறார்கள். அப்படி மாற்றம் செய்கிறபோதுதான் பலவிதமான கோளாறுகள் ஏற்படுகின்றன. இப்படி அவரவர்கள் தம் தம் இஷ்டத்திற்கு மாற்றம் செய்யாதிருக்க ஐந்தாண்டுக்கு ஒரு முறை முன்பு இருந்த வரியில் ரூபாய்க்கு இத்தனை பைசாதான் உயர்த்தலாம் என்று நிர்ணயிக்க அரசாங்கமே முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரூராட்சி, நகராட்சி மன்றங்கள் வளர்கின்ற தன்மையைப் பொறுத்து, வளர்ச்சியின் அடிப்படையில் தான் இந்த வரியை நிர்ணயம் செய்கிறார்கள். இந்த வளர்ச்சி விகிதம் எல்லா நகரங்களிலும் ஒன்றாக இருப்பது இல்லை. ஆகவே, அரசாங்கம் இதுபற்றி முடிவு செய்ய முடியாது. ஆங்காங்குள்ள அதிகாரிகள் நியாயமான முறையில் தான் விதிப்பார்கள் என்று நம்பிக்கையை வைத்துத்தான் ஆகவேண்டும்.